பாபு தையல் இயந்திரம் திருத்துமிடம்

0776906182

# தினப்புயல்

THINAPPUYAL
REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06

கலையரசி நகைமாடம்

புதுக்குடியிருப்புச் சந்தி, புதுக்குடியிருப்பு.
T.P- 0770457661

மலர்-01 Tel&Fax:- 0242227558, Hot line: 0711850885. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் – 01

## இலங்கையில் கொவிட் தொற்றின் தீவிரத்தால், தனிமைப்படுத்தல் ஊரடங்கு நீடிப்பு!

நாடளாவிய ரீதியில் அமுலில் இருந்த தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டம் எதிர்வரும் 13 ஆம் திகதி அதிகாலை 4 மணி வரை நீடிக்கப்பட்டுள்ளது. தற்போதுள்ள கொரோனா தொற்றுப் பரவல் அதிகரிப்பை கருத்திற்கொண்டு தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டத்தை நீடிப்பதற்கான பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டிருந்த நிலையில். அரசின் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

இலங்கையில் தற்போது நாளொன்றுக்கு 200 பேருக்கு மேல் கொவிட் மரணங்கள் பதிவாகி வருவதுடன். தொற்றாளர்களின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகின்றது. கொரோனாவின் திரிபான டெல்டா இலங்கை முழுவதும் பரவியிருக்கக்கூடும் என எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது.

## பிரித்தானியாவின் அதிரடி

2000ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க பிரித்தானிய பயங்கரவாத சட்டத்தின் கீழ், LTTE அமைப்பிற்கு விதிக்கப்பட்டிருந்த தடையை நீடிப்பதற்கு பிரித்தானியா தீர்மானித்துள்ளது. இந்த தீர்மானம் தொடர்பில் பிரித்தானிய உள்துறை செயலாளரால் இலங்கை அரசாங்கத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக, இலங்கையின் வெளிவிவகார அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரித்தானியாவில் தமக்கு விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்குமாறு LTTE அமைப்பினால் விடுக்கப்பட்ட கோரிக்கை நிராகரிக்கப்பட்டு, பிரித்தானியாவின் தடை செய்யப்பட்ட அமைப்புகள் தொடர்பான மேன்முறையீட்டு ஆணைக்குழுவினால் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இந்த தீர்மானத்திற்கு அமைய ஐரோப்பிய வலயம் உள்ளிட்ட 30க்கும் அதிக நாடுகளிலும் பிரித்தானியாவிலும் LTTE அமைப்பு தடை செய்யப்பட்ட அமைப்பாகவே கருதப்படும்.

பயங்கரவாதத்திற்கு எதிரான பூகோள போராட்டத்தில் பிரித்தானியாவிற்கும் ஏனைய நாடுகளுக்கும் இடையிலான பிணைப்பை இலங்கை அரசாங்கம் பாராட்டியுள்ளது.



## இலங்கை : மாணவர்களுக்கு பைசர் தடுப்பூசிகள்




மருத்துவ அனுமதி கிடைத்தவுடன் பாடசாலை மாணவர்களுக்கு பைசர் (Pfizer) தடுப்பூசியை வழங்குவதற்கான இயலுமையுள்ளதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஸ தெரிவித்துள்ளார்.

இன்று (03) நடைபெற்ற COVID ஒழிப்பு விசேட குழுவின் கூட்டத்தில் கலந்துகொண்டு ஜனாதிபதி இதனை தெரிவித்ததாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

தடுப்பூசியேற்றும் திட்டத்தின் முன்னேற்றம் மற்றும் எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பாக இதன்போது விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

20 முதல் 29 வயதிற்கு இடைப்பட்ட பிரிவினருக்கு தடுப்பூசியேற்றும் நடவடிக்கையை அடுத்த 02 வாரங்களுக்குள் முடிவுக்கு கொண்டுவர வேண்டியதன் அவசியம் தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டதாக ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

நாடளாவிய ரீதியில் 30 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கான தடுப்பூசியேற்றும் திட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு ஒத்துழைப்பு வழங்கிய சுகாதார தரப்பு, பாதுகாப்பு தரப்பு உள்ளிட்ட அனைத்து தரப்பினருக்கும் ஜனாதிபதி பாராட்டு தெரிவித்துள்ளார்.

## விநியோகஸ்தரின் களஞ்சியசாலை முன்னால் திரண்ட மக்களைக் கட்டுப்படுத்த களமிறங்கிய சுகாதாரத்துறை மற்றும் பாதுகாப்புப் படையினர்



(நூருல்ஹுதா உமர்)

நிந்தவூரில் உள்ள வெளிநாட்டு தயாரிப்பு பால்மா விநியோகஸ்தரின் களஞ்சியசாலை முன்னால் திரண்ட மக்கள் பால்மா தருமாறு கோரி நீண்ட வரிசையில் சமூக இடைவெளி எதுவுமில்லாது மிக நெருக்கமான வரிசையில் காத்திருந்தனர். இந்த மக்கள் நெரிசலை கட்டுப்படுத்த முடியாத விநியோகஸ்தரும். அந்த பால்மா விநியோக ஊழியர்களும் வாயிற்கதவை அடைத்து பால்மா விநியோகத்தை நிறுத்தினர். சம்பவ இடத்திற்கு வந்த பாதுகாப்புப் படையினர் பொது மக்களின் நிலைகளை விளக்கி பால்மா விநியோகம் தொடர்பில் ஒழுங்கான பொறிமுறையொன்றை அமைக்குமாறு விநியோகஸ்தரிடம் கோரினர்.

கட்டுக்கடங்காமல் ஊரடங்கு அமுலில் உள்ள இந்த சூழ்நிலையில் நிந்தவூரில் கொரோனா அலை அதிகமாக உள்ள விடயத்தை கவனத்தில் கொண்டு நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரோசா நக்பருக்கு வழங்கப்பட்ட தகவலையடுத்து நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி காரியாலய ஊழியர்களினால் குறித்த விநியோகஸ்தரின் களஞ்சியசாலை வளாகத்தில் கொரோனா பரிசோதனை நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டது. சம்பவ இடத்திற்கு வந்த சம்மாந்துறை போக்குவரத்து பொலிஸாரும். சம்மாந்துறை பொலிஸ் நிலைய உத்தியோகத்தர்களும் பாதுகாப்பு படையினருடன் இணைந்து நிலையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

சம்பவ இடத்திற்கு வந்த நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரோசா நக்பர். பாதுகாப்புப் படையினர். சம்மாந்துறை பொலிஸ் நிலைய பொலிஸார். பால்மா விநியோகஸ்தர் என பலரும் கலந்துரையாடி பால்மா விற்பனையை நிறுத்தி வர்த்தக நிலையங்களுடாக பால்மா விநியோகிக்க நடவடிக்கை எடுத்தனர். கொரோனா சட்டதிட்டங்கள் எதையும் மதிக்காது இடம்பெற்ற இந்த சம்பவம் தொடர்பில் மக்கள் தமது அதிருப்தியை வெளியிட்டு வருகின்றனர். மேலும். பால்மா தட்டுப்பாடு காரணமாக காரைதீவில் அதே வெளிநாட்டு தயாரிப்பு பால்மா விநியோக வாகனத்தை காரைதீவில் இடைமறித்து மக்கள் பால்மா கேட்டு நின்றதுடன். நீண்டநேர போராட்டத்தின் பின்னர் குறித்த நிறுவன ஊழியர்கள் மக்களிடமிருந்து சென்றனர்.

## நாட்டில் உள்ள வெளிநாட்டவர்களின் விசாக்களுக்கான செல்லுபடிக்காலம் நீடிப்பு

*தற்போது நாட்டில் தங்கியுள்ள வெளிநாட்டவர்களின் அனைத்து விதமான விசாக்களினதும் செல்லுபடிக்காலம் ஒக்டோபர் 07 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.*

*இதற்கிணங்க, 2021 மே மாதம் 11 ஆம் திகதி முதல் 2021 ஒக்டோபர் மாதம் 07 ஆம் திகதி வரையிலான காலப்பகுதிக்குள் காலாவதியாகும் விசாக்களுக்கு அக்காலப் பகுதிக்கான விசா கட்டணங்கள் மாத்திரமே அறவிடப்படும் என குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் அறிவித்துள்ளது.*

*அத்துடன், எவ்வித தண்டப்பணமும் அறவிடப்பட மாட்டாது என திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

## கள பணியில் ஈடுபட்டு வரும் கிராம சேவகர் மற்றும் சமுர்த்தி உத்தியோகஸ்தர்களுக்கு கொவிட் தொற்று பாதுகாப்பு அங்கிகள் வழங்கப்படவேண்டும்

### நோர்வூட் பிரதேச சபை உறுப்பினர் மு.இராமச்சந்திரன் வேண்டுகோள்



நாளாந்தம் கொரோனா தொற்றார்களின் எண்ணிக்கையும் தொற்றுக்குள்ளாகி மரணமாவோரின் எண்ணிக்கையும் அதிகரித்த வண்ணம் உள்ள நிலையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர்மேலும்தெரிவித்துள்ளதாவது. கடந்த மாதம் 21ஆம் திகதி முதல் பொது முடக்க ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளதுடன் அத்தியாவசிய சேவைகளுக்கு மாத்திரம் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இந்நிலையில் கொரோனா தொற்று ஆரம்பித்த காலம் முதல் களப் பணியில் கிராம உத்தியோகஸ்தர்களும். சமுர்த்தி உத்தியோகஸ்தர்களும் ஈடுபட்டு வருகின்றனர். இவர்கள் நாள் தோறும் பொது மக்கள் மத்தியிலே பணியாற்றி வருகின்றனர். அந்த வகையில் அரசாங்கத்தினால் வழங்கப்படும் 2000 ருபாய் நிவாரணப் பணமும் சமுர்த்தி மற்றும் கிராம சேவகர்களே பயனாளிகளுக்கு வழங்கி வருகின்றனர்.

இவ்வாறான சந்தர்ப்பத்தில் காரியாலயங்களுக்கு வருகைதரும் பயனாளிகளின் உடல் நிலையை அறிய வாய்ப்பில்லை. ஆகவே. பெரும் அச்சத்திற்கு மத்தியிலே தமது பணியினை முன்னெடுத்து வரும் சமுர்த்தி மற்றும் கிராம உத்தியோகஸ்தர்களினதும். அவர்களது குடும்பத்தினரின் சுகாதார பாதுகாப்பு தொடர்பில் சுகாதார தரப்பினர் கவனம் செலுத்த வேண்டும் என்பதோடு. அவர்களுக்கான சுகாதாரப் பாதுகாப்பு அங்கிகளை வழங்கி அவர்களின் சுகாதாரப் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படவேண்டும் என குறிப்பிட்டுள்ளார்.

## பட்டதாரி பயிலுனர்களை சேவையில் நிரந்தரமாக்க நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை - இம்ரான் எம்.பி



- பைஷல் இஸ்மாயில் -

கிழக்கு மாகாணத்தில் கடந்த 2 வருடங்களுக்கு முன் நியமிக்கப்பட்ட பட்டதாரி பயிலுனர்களை சேவையில் நிரந்தரமாக்க நடவடிக்கை எடுக்குமாறு திருகோணமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் கிழக்கு மாகாண நிர்வாகத்திற்கு பொறுப்பான பிரதிப் பிரதம செயலாளர் எச்.ஈ.எம்.டப்ளிவ். ஜீ.திசாநாயக்கவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

குறித்த விடயம் தொடர்பில். பிரதிப் பிரதம செயலாளருக்கு அவர் அனுப்பியுள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது. ஒரு வருட பயிலுனர் சேவையின் பின் நிரந்தர நியமனம் வழங்கப்படும் என்ற அடிப்படையிலேயே பட்டதாரி பயிலுனர் நியமனம் வழங்கப்படுகின்றது. இதன் அடிப்படையில் 2019இல் மத்திய அமைச்சு. திணைக்களங்களில் நியமனம் வழங்கப்பட்ட பட்டதாரி பயிலுனர்கள் ஏற்கனவே நிரந்தரமாக்கப்பட்டுள்ளனர்.

எனினும் இதே காலப் பகுதியில் கிழக்கு மாகாண சபையில் இணைக்கப்பட்ட பட்ட தாரி பயிலுனர்கள் இரண்டு வருடங்களாகியும் இதுவரை நிரந்தரமாக்கப்படவில்லை. இதனால் இந்தப் பட்டதாரிகள் தமக்குரிய வரப்பிரசாதங்களை இழந்து வருவதாக கவலை தெரிவிக்கின்றனர். எனவே. மத்திய அமைச்சு திணைக்களங்களில் நிரந்தரமாக்கப்பட்டது போன்று கிழக்கு மாகாண சபையில் உள்ளீர்க்கப்பட்ட பட்டதாரி பயிலுனர்களையும் சேவையில் நிரந்தரமாக்க நடவடிக்கை எடுக்குமாறு அவர் கேட்டுள்ளார்.

# நியூசிலாந்தில் கத்திக்குத்து, இலங்கையர் சுட்டுக்கொலை

நியூசிலாந்தில் பல்பொருள் அங்காடி ஒன்றில் கத்திக்குத்து தாக்குதல் நடத்திய இலங்கையர் ஒருவர் பொலிஸாரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். இன்று (03) முற்பகல் நடத்தப்பட்ட இந்த கத்திக்குத்து தாக்குதலில் 6 பேர் காயமடைந்துள்ளதுடன். மூவர் கவலைக்கிடமான நிலையில் உள்ளனர்.

நியூசிலாந்தின் யுரஉமடயனெ பகுதியில் உள்ள பல்பொருள் அங்காடியில் நுழைந்த நபர் கத்திக்குத்து தாக்குதலை ஆரம்பித்த 60 செக்கன்ட்களில் பொலிஸாரால் சுட்டுக்கொல்லப்பட்டதாக நியூசிலாந்து பிரதமர் ஜெசிந்தா ஆர்டன் தெரிவித்துள்ளார். குறித்த நபர் இலங்கையை சேர்ந்த அடிப்படைவாத செயற்பாடுகளில் ஈடுபடும் ஒருவர் என ஜெசிந்தா ஆர்டன் குறிப்பிட்டுள்ளார். எனினும். கடந்த 10 வருடங்களாக அந்நபர் நியூசிலாந்தில் வசித்து வந்துள்ளார். 5 வருடங்களாக அந்நபரை நியூசிலாந்தின் பாதுகாப்பு தரப்பினர் கண்காணித்து வந்துள்ளனர்.

ஐளு பயங்கரவாத குழுவினரை பின்தொடரும் அந்நபர் கடந்த 2011 ஆம் ஆண்டில் நியூசிலாந்து சென்றுள்ளதாக இலங்கையின் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்தது. வெறிக்கத்தக்க. தவறான இந்த செயலை செய்த நபர் மாத்திரமே இந்த தாக்குதலுக்கு பொறுப்பாளியாவார் என ஜெசிந்தா ஆர்டன் குறிப்பிட்டுள்ளார். தாக்குதல் நடத்திய நபர் தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.



## உயர்தரப் பரீட்சை, தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சைகளுக்கான விண்ணப்பங்கள் தொடர்பாக கல்வி அமைச்சின் அறிவிப்பு

கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர்தரப் பரீட்சை மற்றும் தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சைகளுக்கான விண்ணப்பங்கள் இணையத் தளத்தின் ஊடாக மாத்திரம் விண்ணப்பிக்க முடியும் என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

நாட்டில் நிலவும் கொவிட் தொற்று நோயைக் கருத்திற்கொண்டு குறித்த பரீட்சைகளுக்கு விண்ணப்பிக்கும் கால எல்லை எதிர்வரும் 15ம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. இது சம்பந்தமான மேலதிக விபரங்களை **www.donet.lk** என்ற இணையத்தளத்தில் அறிந்துகொள்ள முடியும்.



# சாதனையை முறியடித்த ஆண்டர்சன்

**சொந்த நாட்டு மண்ணில் அதிக டெஸ்ட் ஆட்டங்களை விளையாடியவர் என்ற சச்சின் டெண்டுல்கர் சாதனையை இங்கிலாந்து வேகப்பந்துவீச்சாளர் ஜேம்ஸ் ஆண்டர்சன் முறியடித்துள்ளார். இங்கிலாந்து, இந்தியா அணிகளுக்கிடையிலான 4 வது டெஸ்ட் ஆட்டம் லண்டன் ஓவல் மைதானத்தில் நடைபெற்று வருகிறது. ஜேம்ஸ் ஆண்டர்சனுக்கு இங்கிலாந்து மண்ணில் இது 95 வது ஆட்டம்.**

**சச்சின் டெண்டுல்கர் இந்திய மண்ணில் 94 ஆட்டங்களில் விளையாடியுள்ளார். சொந்த மண்ணில் அதிக ஆட்டங்களில் விளையாடிய வீரர் என்ற சாதனையை அவர் தன்வசம் வைத்திருந்தார். 4 வது டெஸ்ட் ஆட்டத்தில் களமிறங்கியதன் மூலம் சச்சினின் இந்த சாதனையை ஆண்டர்சன் முறியடித்துள்ளார்.**

**சொந்த நாட்டு மண்ணில் அதிக டெஸ்ட் ஆட்டங்களில் விளையாடிய வீரர்கள்:**
**ஜேம்ஸ் ஆண்டர்சன் (இங்கிலாந்து) – 95 டெஸ்ட் ஆட்டங்கள்**
**சச்சின் டெண்டுல்கர் (இந்தியா) – 94**
**ரிக்கி பாண்டிங் (அவுஸ்திரேலியா) – 92**
**அலெஸ்டர் குக் (இங்கிலாந்து) – 89**
**ஸ்டீவ் வாக் (அவுஸ்திரேலியா) – 89**




# நடிகர் சித்தார்த் சுக்லா காலமானார்

**பிக் பொஸ் பட்டம் வென்ற நடிகர் சித்தார்த் சுக்லா மாரடைப்பால் இன்று காலமானார். அவருக்கு வயது 40.**

**ஹிந்தி பிக் பொஸ் 13–ம் பருவ நிகழ்ச்சியை வென்றவர் நடிகர் சித்தார்த் சுக்லா. ஏராளமான தொலைக்காட்சித் தொடர்களில் நடித்துள்ள சித்தார்த் சுக்லா, இரு படங்களில் நடித்துள்ளார். 2008ல் தொலைக்காட்சித் தொடர்களில் நடிக்க ஆரம்பித்தார். பிறகு 2014ல் பொலிவூட்டில் அறிமுகமானார்.**

**இந்நிலையில் இன்று காலை மாரடைப்பு ஏற்பட்டு மும்பையில் மரணமடைந்துள்ளார் சித்தார்த் சுக்லா. அதிகாலையில் மாரடைப்பு ஏற்பட்டதால் உடனடியாக மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டார். எனினும் அவரைக் காப்பாற்ற முடியவில்லை. சித்தார்த் சுக்லாவுக்கு தாயும் இரு சகோதரிகளும் உள்ளார்கள்.**

## வட்ஸ் அப் நிறுவனத்திற்கு அபராதம்




பயனர்களின் தனியுரிமை தரவுகளை தவறாகக் கையாண்டதாகக் கூறி வட்ஸ் அப் நிறுவனத்திற்கு அயர்லாந்து அரசு இந்திய மதிப்பில் ரூ.1949 கோடி அபராதம் விதித்துள்ளது. வட்ஸ் அப் செயலி உலகம் முழுவதும் பரவலாக பயன்படுத்தப்பட்டு வருகிறது. பயனர்களின் தரவு களை விற்பனை செய்வதாக அவ்வப்போது அந்நிறுவனத்தின் மீது புகார்கள் எழுந்து வந்தன.

இந்நிலையில் கடந்த 2018ஆம் ஆண்டு அயர்லாந்து நாட்டின் தரவு பாதுகாப்பு விதிகளை மீறியதாக அந்நிறுவனத்தின் மீது குற்றச்சாட்டு எழுந்தது. இதுதொடர்பான விசாரணையில் வட்ஸ் அப் நிறுவனம் முறை கேட்டில் ஈடுபட்டது உறுதியானது. இதனைத் தொடர்ந்து பயனர்களின் தரவுகளை ஐரோப்பிய நிறுவனங்களுக்கு பகிர்ந்த குற்றத்திற்காக வட்ஸ் அப் நிறுவனத்திற்கு இந்திய மதிப்பில் ரூ.1949 கோடி அபராதம் விதித்து அயர்லாந்து அரசு உத்தரவிட்டுள்ளது. மேலும் பயனர்களின் தரவு பாதுகாப்பை உறுதி செய்யவும் அந்நிறுவனத்திற்கு உத்தர விடப்பட்டுள்ளது. எனினும் வட்ஸ் அப் நிறுவனம் அரசின் அபராதத்திற்கு எதிராக மேல்முறையீடு செய்ய உள்ளதாகத் தெரிவித்துள்ளது.

## இயக்குநர் மணிரத்னம் மீது வழக்குப்பதிவு



பொன்னியின் செல்வன் படப்பிடிப்பின் போது குதிரை ஒன்று இறந்ததன் காரணமாக இயக்குநர் மணிரத்னம் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. மணிரத்னம் தற்போது பொன்னியின் செல்வன் படத்தை இயக்கி வருகிறார். இந்தப் படத்தில் ஜெயம் ரவி. கார்த்தி. விக்ரம். ஐஸ்வர்யா ராய். த்ரிஷா. ஜெயராம். பிரபு. ரகுமான். பாபு ஆண்டனி. கீர்த்தி சுரேஷ். ஐஸ்வர்யா லக்ஷ்மி என ஒரு பெரும் நட்சத்திர பட்டாளமே நடித்து வருகின்றனர்.

இந்தப் படத்துக்கு ரவி வர்மன் ஒளிப்பதிவு செய்ய. ஏ.ஆர். ரஹ்மான் இசையமைக்கிறார். இந்தப் படத்தின் படப்பிடிப்பு மத்தியப் பிரதேசம் மாநிலத்தில் நடைபெற்று வருகிறது. இரண்டு பாகங்களாக உருவாகும் இந்தப் படத்தின் முதல் பாகம் அடுத்த ஆண்டு வெளியாக வுள்ளது. வரலாற்றுப் பின்னணி கொண்ட படம் என்பதால் போர் காட்சிகள் அதிகம் உள்ளன. நிறைய குதிரைகள் இந்தப் படத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஒரு சண்டைக் காட்சி படமாக்கப்பட்டபோது. குதிரை ஒன்று இறந்துள்ளது. இதனைத் தொடர்ந்து பீட்டா அமைப்பு. மணிரத்னம் மீதும் தயாரிப்பு நிறுவனமான மெட்ராஸ் டாக்கீஸ் மீதும் புகார் அளித்தது. இதனைத் தொடர்ந்து மணிரத்னம் மீதும். அந்நிறுவ னம் மீதும். அந்தக் குதிரையின் உரிமையாளர் மீதும் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

## ஜப்பான் பிரதமர் இராஜினாமா

ஜப்பான் பிரதமர் யோஷிஹிடே சுகா (Yoshihide Suga) இராஜினாமா செய்யவுள்ளதாக அறிவித்துள்ளார். இம்மாதம் 29 அம் திகதி நடைபெறவுள்ள கட்சித் தலைவர் தேர்தலில் தாம் போட்டியிடப்போவதில்லை எனவும் அவர் அறிவித்துள்ளார்.

சுமார் ஒரு வருடங்களுக்கு முன்னர் முன்னாள் பிர தமர் சின்ஷோ அபே பிரதமர் பதவியை இராஜினாமா செய் ததையடுத்து, யோஷிஹிடே சுகா பிரதமராக நியமிக்கப் பட்டார். யோஷிஹிடே சுகாவின் ஆட்சி தொடர்பில் அதிருப்தி நிலவி வந்த நிலையில், அவர் இந்த அறிவிப்பை வெளி யிட்டுள்ளார். COVID தொற்று காரணமாக ஜப்பானில் டோக்கியோ உட்பட சில நகரங்களில் அவசரகால நிலை பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில், கட்சித் தலைவர் தேர்தலில் போட்டி யிடுவதை விடுத்து COVID ஒழிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடப்போவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். விவசாய குடும்பப் பின்னணியைக் கொண்ட 72 வயதான யோஷிஹிடே சுகா 1987 ஆம் ஆண்டு யொகோஹாமா நகரசபைத் தேர்தலில் வெற்றி பெற்றார். தொடர்ந்து 1996 இல் முதன் முறை யாக அந்நாட்டு பாராளுமன்றத்திற்கு தெரிவானார். 2005 ஆம் ஆண்டு வெளிவிவகாரத்திற்கான சிரேஷ்ட துணை அமைச்சுப் பதவி அவருக்கு வழங்கப்பட்டது. தொடர்ந்து 2007 இல் மூன்று அமைச்சுகள் அவரிடம் கையளிக்கப் பட்டன. இந்நிலையில், எதிர்வரும் நவம்பர் மாதம் 28 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் அந்நாட்டு பொதுத்தேர்தல் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சீனி, அரிசிக்கான விலைகள் நிர்ணயிக்கப்பட்டும் மக்கள் அவதி

சீனிக்கான அதிகூடிய சில்லறை விலையை நிர்ணயித்து விசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியானது. ஒரு கிலோ பொதி செய்யப்பட்ட சீனியை விற்பனை செய்யக்கூடிய அதிகபட்ச சில்லறை விலையாக 125 ரூபா நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அத்துடன், பொதி செய்யப்படாத ஒரு கிலோ சீனி விலை 122 ரூபாவாக நிர்ணயிக்கப் பட்டுள்ளது. அதேபோல், ஒரு கிலோ பொதிசெய்யப்பட்ட சிவப்பு சீனி யின் விலை 128 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

மேலும், பொதிசெய்யப்படாத ஒரு கிலோ சிவப்பு சீனியின் விலை 125 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதற்கிடையில், அரிசிக் கான அதிகூடிய சில்லறை விலையை நிர்ணயித்து விசேட வர்த்த மானி அறிவித்தல் ஒன்றும் வெளியாகியுள்ளது. இதன்படி, கீரி சம்பா கிலோ ஒன்றின் விலை 125 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அத்துடன், வெள்ளை அல்லது சிவப்பு சம்பா அரிசி கிலோ ஒன்றின் விற்பனை விலை 103 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

அதேபோல், சிவப்பு நாடு கிலோ ஒன்றின் அதிகூடிய சில்லறை விலை 98 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பச்சை அரிசி கிலோ ஒன்றின் அதிகூடிய விலை 95 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ள போதிலும், நாட்டு மக்கள் அரசி மற்றும் சீனியை குறித்த அரசின் நிர்ணயிக்கப்பட்ட விலைகளுக்கு பெற்றுக்கொள்ள முடியாத நிலை இருப்பதாக அறிய முடிகிறது. குறித்த அரசின் விலைக்கு விற்பனை செய்ய முடியாது, தமக்கு இன்னமும் அறிவுறுத்தல் வரவில்லை எனவும், தாம் பழைய விலைக்குத் தான் விற்போம் என வர்த்த கர்கள் கூறி வருகின்றனர்.